7th March 1968]

சிவலப் பேரியில் பஞ்சாயத்து வரி வசூல்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்ட சிவலப்பேரியில் பஞ்சாயத்து வரி வசூல் 10 வருடமாக செய்யாமல் மொத்தமாக தற்போது வசூல் செய்யப் படுகிறதா ?

(இ) மூன்று வருடங்களுக்கு மேல் உள்ள வரி பாக்கி வசூல் செய்ய சட்டம் அனுமதிக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 1959–60-ம் ஆண்டு முதல் வரி நிலுவை வசூல் செய்யப்பட வேண்டியுள்ளது. நிலுவைத் தொகை யை வசூல் செய்யும்படி, கிராம அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளது.

(இ) ஆம். திருத்தப்பட்ட தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 165-வது பிரிவில் ஆறு ஆண்டு காலம் வரையில், வரி நிலுவை வசூலிக்கப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது.

Mayiladumparai-Krishnapuram Road

*210 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether a road had been formed from Mayiladumparai in Zamin Kandamanaickanoor of Madurai District to Krishnapuram of Thirumangalam Taluk at an expenditure of more than a lakh of rupees some ten years ago ;

(*b*) whether the road was damaged completely due to non-maintenance ; and

(*c*) whether the road will be repaired soon ?

மயிலாடும்பாறை கிருஷ்ணபுரம் சாலை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மதுரை மாவட்ட கண்டமநாயக்கனூர் ஜமீன் மயிலாடும் பாறையி லிருந்து திருமங்கலம் தாலுக்கா கிருஷ்ணபுரத்திற்கு 10 ஆண்டுகளுக்கு முன் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து சாலை போடப்பட்டதா ?

(இ) அந்த ரோடு மராமத்து செய்யாததால் யாவும் அழிந்துவிட்டதா?

(உ) விரைவில் மராமத்து செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 1956–58 ஆண்டுகளில் மத்திய சாலை நிதி மானியத்தின் கீழ் மல்லபுரம்—நரசிங்கபுரம் சாலை என்ற பெயருடன் இந்தச் சாலை அமைக்கப்பட்டது.

(இ) இந்தச் சாலை கைவிடப்படவில்லை. இந்தச் சாலை மலைப்பகுதியில் ஓரளவு செல்கிறது. இது ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த மண் சாலையாகும். எனவே, இதனை ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த மண் சாலையாக மட்டுமே பேணி வர முடியும்.

(உ) இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இந்த ரோடில் ஒரு 13 அல்லது 14 மைல் மராமத்து செய்ய வேண்டியிருக்கிறது. ஏற்கனவே இதற்கு $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் நிதியிலிருந்து முன்பு செலவு செய்யப்பட்டது. ஊராட்சி

[7th March 1968

களுக்கு இப்போது செலவு செய்ய வேண்டுமென்றால் 3, 4 லட்சமாகும். ஆகவே, இந்தச் சாலையை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு மராமதது செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்த சாலை ரூ. 1,38,600 செலவில் அமுல் செய்யப்பட்டுள்ளது. இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொந்தமானது. ஆகவே ஊராட்சி ஒன்றியங்களால் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு தான் செய்யப்பட்டது. எல்லா முறைகளையும் பயன்படுத்த வேண்டுமென்றால் பொதுவாக மேற்கொண்டு சீர்திருத்த 8 லட்சம் ரூபாய் செலவாகும். ஊராட்சி ஒன்றியங்களில் அவ்வளவு நிதி இல்லாததால் இருக்கிற நிதியை வைத்துக்கொண்டு அந்த அளவிற்கு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. கே. ராஜாராம் : இந்த சாலை ஜில்லா போர்டு காலத்திலே போடப்பட்டது. இப்போது ஜில்லா போர்டு வாரிசாக பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. அவர்கள் பராமரிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. இவ்வளவு பெரிய ரோட்டை பராமரிப்பது அவர்களுக்கு முடியாததால் அரசாங்கமே அதை எடுத்து ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் மூலம் பராமரிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கனம் எதிர்கட்சி தலைவர் இந்த ஊராட்சி ஒன்றியங்களின் குழுவின் தலைவராக இருந்து இந்த சிரமங்களை அனுபவித்தவர். இதிலுள்ள தொல்லைகளை எல்லாம் அறிவார்கள். அவர்கள் ஒத்துழைத்து நிதி அதிகம் பெற்றுத் தருவார்களானால் நிச்சய மாக அதைச் செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, மயிலாடும் பாறை வைகை ஆரம்பிக்கும் இடத்திலே இது இருக்கிறது. இதிலிருந்து வெளியே இந்தப் பக்கம் ஆண்டிப்பட்டி, தேனி, உசிலம்பட்டி வழியாகத் திருமங்கலம் தாலுக்காவிற்கு வருவதற்கு 30 அல்லது 40 மைல் சுற்றிக் கொண்டு வரவேண்டும். ஆனால் இந்தப் பாதை சுருக்கமாகப் போடப் பட்டது. ஆகவே இந்தப் பாதையை ஊராட்சி ஒன்றியம் ஏற்று நடத்த போதுமான வசதியில்லாததால் 20 மைல் தூரத்தை சுற்றாமல் இருக்க விசேஷமாக கருதி நிதி செலவழிக்கப்பட்டாலும் கூட அது நல்ல உபயோகமாகும். இது மிகவும் முக்கியமான ரோடு. ஆகவே சர்க்கார் இதற்கு நிதி உதவி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இதுபோன்ற சாலைகள் போக்குவரத்திற்கு பயன்படக்கூடியவை இருப்பது நமக்குத் தெரிகிறது. ஆனால் நம்முடைய எண்ணத்திற்கேற்ப கையிலே பணமில்லாததால் தான் யோசிக்க வேண்டியிருக்கிறது.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.**]

II.—ANNOUNCEMENT *RE*. ELECTION OF NINE MEMBERS TO COMMITTEE OF PRIVILEGES.

MR. CHAIRMAN : I have to inform the House that the following candidates have been validly nominated for election of nine Members to the Committee of Privileges for the financial year 1968-69 :—

1 The Hon. Thiru C. N. Annadurai.
2 Thiru K. Rajaram.
3 Thiru R. Raman Nair.
4 Thiru T. K. Subbiah.
5 Thirumathi S. Manjubhashini.
6 Thirumathi Lakshmi Krishnamurthy.